வந்து ஒரு இடத்திலே அதை ட்ரீட் செய்ய வேண்டிய நிலைமை இருக்கிறது. எனவே இதைச் செய்வதற்கு ஆறு மாத காலத்திலே முடித்துவிட முடியும் என்று சொல்ல முடியாது. ஆனால் வேலைகளை வேகமாகத் தொடங்கி விரைவாக முடிப்பதற்கான நடவடிக்கையை நாம் எடுக்கலாம்.

(ஆ) தென்னாற்காடு மாவட்டம் சங்கராபுரம் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளும் மின்சாரம் தடைபடுவது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. சி. இராமசுவாமி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. இராமசுவாமி.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தென்னாற்காடு மாவட்டம் சங்கராபுரம் பகுதிகளில் இரவு ஏழு மணி முதல் பத்து மணி வரை மின்சாரம் தடைபடுவது குறித்து" மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ், கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

சங்கராபுரம் நகர் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் இரவு 7 மணி முதல் 10 மணி வரை ஒரு முனை மின் பாதையில் மின்சக்தி வழங்கப்படுகிறது. சங்கராபுரம் துணைமின் நிலையத்திலுள்ள மின்மாற்றியின் கொள்திறனுக்கு கூடுதலாக மின் பளுக்கள் இணைப்பில் உள்ளதால் பகல் நேரங்களில் சுழல் முறையில் சுமார் 1 மணி முதல் 2 மணி நேரம் வரை பளு குறைப்பு (Load Shedding) செய்யப்பட்டு வருகிறது. இத்தடங்கல் மிகவும் குறைந்த அளவே இருக்கும்படி, தற்பொழுதுள்ள மின் மாற்றி பாது காப்பு சாதனங்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இத் துணை மின் நிலையத்தில் மேலும் ஒரு 10 எம்.வி.ஏ. மின்மாற்றி அமைப்பது பற்றி ஏற்கனவே ஆராயப்பட்டு 18—3—1992 அன்று இதற்கான உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது. வரும் ஜூன் மாதம் இந்த மின்மாற்றி தொழிற்சாலையிலிருந்து பெறப்படவுள்ளது. மின்மாற்றி வந்தவுடன் அமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

*திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் 10 எம்.வி.ஏ. மின்மாற்றி அமைப்பது பற்றி 18—3—1992-இல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. மேற்படி மின்மாற்றி ஜூன் மாதம் கிடைக்கும் என்றும் வந்தவுடன் அமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்றும் கூறப் பட்டுள்ளது. என்னுடைய சங்கராபுரம் தொகுதி முழுவதும் அரசம்பட்டு, செல்லம்பட்டு, கரடிசித்தூர் மற்றும் பூட்டை, மணலூர், வட செருவலூர் போன்ற பகுதிகளில் முற்றிலும் இரவு நேரங்களில் மின்சாரம் வருவது கிடையாது. அங்கே ஒரேயொரு டிரான்ஸ் பார்மர்தான் இருக்கிறது. எனவே, உடனடியாக மாற்று ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு சங்கரா புரம் பகுதி மட்டுமல்ல, நான் ஏற்கனவே இந்த அவை யிலே தெரிவித்து இருக்கிறேன். மின்சார வாரியத்தைப் பொறுத்தமட்டில் ஏற்கனவே பல்வேறு குறைபாடுகள் நம்முடைய அரசு பொறுப்பேற்பதற்கு முன்னாலேயே இந்தப் பிரச்சினை அதிகமாக இருந்திருக்கிறது. இன்றைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே தான் மின் அழுத்தம் குறைவாக இருக்கின்ற பகுதிகளை எல்லாம் கணக்கு எடுக்கவேண்டும் என்று சொல்லி, அதற் காக ஒரு தனி அதிகாரியை ஒரு ஆண்டு காலத்திற்கு நியமித்து, அனைத்து மாவட்டங்களிலும் ஒரு ''காம்ஃப்ர ஹென்சிவ் ப்ளான்'' ஒன்று தயாரித்துக் கொண்டு இருக்கிறோம். எந்த எந்த இடங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் எங்கெங்கு மின்னழுத்தக் குறைபாடு இருக்கிறது, அதற்கு என்ன செலவாகும், எந்த எந்த டிரான்ஸ்பார்மர்கள் மாற்றப்பட வேண்டுமென்பதற்கு, இன்றைக்கு மின்வாரியத்தின் மூலம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் ஒப்புதலோடு பெரிய திட்டத்தைத் தீட்டிக்கொண்டிருக்கிறோம். அதனுடைய முன்மாதிரியாக நம்முடைய தர்மபுரி மாவட்டத்திலே அந்த ப்ளான் தயாரிக்கப்பட்டு, அதனுடைய திட்ட வடிவம் மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே வழங்கப் பட்டிருக்கிறது. அதைப்போலவே எல்லா மாவட்டங் களிம் இந்தப் பிரச்சினையைத் தீர்த்தாக வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக் கிறார்கள். ஆகவே, இதை ஒரு தொலைநோக்கோடு செய்யவேண்டிய பிரச்சினை என்ற காரணத்தினாலே, அனைத்துப் பகுதிகளிலிருந்தும் இன்று புகார்கள் வந்து

கொண்டிருக்கிற காரணத்தினாலே இதற்கு ஒரு நிரந்தரமான தீர்வு காண வேண்டுமென்று இன்றைக்கு அதற்கான நடவடிக்கையை இந்த அரசு முனைப்பாக எடுத்திருக்கிறது. அதிலே ஒரு நடவடிக்கைதான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற பகுதியிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே 18—3—1992 அன்று 10 எம்.வி.ஏ. டிரான்ஸ்பார்மர்கள் போடவேண்டும் என்று உத்தரவு போடப்பட்டு அந்த டிரான்ஸ்பார்மர் வாங்குவதற்கு ஆர்டர்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஜூன் மாதம் அதைத் தர இருக்கின்றார்கள். வந்தவுடனே அந்தப் பகுதியிலே புதிய டிரான்ஸ்பார்மர் நிறுவப்படும். ஏற்கனவே மின் அழுத்தம் குறைவாக இருக்கின்ற பகுதிகளில் முறையாக மின் அழுத்தம் குறைவில்லாத அளவுக்குச் சீராக இருக்கும்படி அரசு பார்த்துக் கொள்ளும். பொதுவாக தமிழ்நாடு முழுவதும் இருக்கின்ற இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரு விரைவான நடவடிக்கையை அரசு எடுத்திருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலே கவன ஈர்ப்புக் கொடுத்திருந்தேன். சங்கராபுரம் பகுதியில் உள்ள கல்வராயன் மலைப் பகுதியில் கொண்டியாநத்தம் பகுதிகளில் மின்சாரம் தடைப்பட்டு அநேக மலைவாழ் மக்கள் இரவிலே வெளியில் வர இயலாமல், மின்சார வசதி இல்லாமல் இருக்கிறார்கள் என்று சொன்னேன். அதே நிலை இன்னும் நீடித்துக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அருள்கூர்ந்து கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலையிலே மின்சாரம் தயார் செய்வதை மற்ற பகுதிக்கும் பயன்படுத்த உத்தரவு செய்யும்படி கேட்டுக் கொள்கிறேன். அங்கிருந்து அந்த மின்சாரத்தை மாணவர்கள் படிப்புக்காகவும் விவசாய மக்களின் நன்மைக்காகவும், பொது மக்களின் நலனைக் கருதியும், கள்ளக்குறிச்சி சர்க்கரை ஆலையில் தயார் செய்யும் அந்த மின்சாரத்தை இடைக்கால நிவாரணமாக அங்கிருந்து பெற்று சங்கராபுரம் தொகுதிக்கு உடனடியாகக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கொண்டு வந்திருக்கிற பிரச்சினை சங்கராபுரம் நகரைப் பற்றிய பிரச்சினை. இன்றைக்கு கல்வராயன் மலைப் பகுதி மக்கள் பிரச்சினை பற்றிச் சொல்லியிருக்கிறார்கள்.

இன்றைக்கு பெகாஸ் (Bagasse) மூலம் மின்சாரம் நம்முடைய கூட்டுறவு சர்க்கரை ஆலையில் அதன் கழிவிலிருந்து தயாரிக்கப்படுகிறது. அந்த மின்சாரத்தை அவர்களுடைய தேவைக்குப் போக மற்ற பகுதிகளுக்கு உபயோகிக்கலாமா என்பதை அரசு ஆய்ந்து வருகிறது. ஆகவே, அந்தப் பகுதியிலே அவர்களுடைய தேவைக்குப் போக உபரியாக மின்சாரம் இருக்குமானால் அதைப் பயன்படுத்துவதற்கு அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2. அறிக்கைகள் அளித்தல்

(அ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள். திரு. கி. தர்மலிங்கம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

முற்பகல் 9-40

திரு. கி. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாறு படைத்துக் கொண்டிருக்கும் நமது புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில்தான் குழுக்களின் அறிக்கைகள் அதிகமாக சமர்ப்பிக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றன என்பதை நான் பணிந்து தெரிவித்துக் கொண்டு, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக, இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின், 1971-72 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் (சிவில்) மீது பொது நிறுவனங்கள் குழு (1989-90) அளித்த ஏழாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய குழுவின் 44-வது அறிக்கை.

இநதியத் தணிக்கைத் துறைத் தலைவரின், 1982-83, மற்றும் 1983-84 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் வணிகம் தொழிற்துறை தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழு (1989-90) அளித்த 46-வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கை பறறிய குழுவின் 45-வது அறிக்கை, மற்றும் இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1982-83 மற்றும் 1983-84 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் வணிகம், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழு (1989-90) அளித்த 24-வது அறிக்கைகளில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் 46-வது அறிக்கை, ஆகியவற்றை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.